உ
சிவமயம்

REGISTERED AS AI
NEWS PAPER IN
CEYLON
RP. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு மாசி மீ உக உ (1948 மார்ச்சு 12 வெள்ளிக்கிழமை) [இல கூ

# சென்மநோய் தீர்க்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## மூவாசை வென்ற மூத்தன்

## குருபூசை இன்று நிகழ்கின்றது

[க. இராமச்சந்திரன்]

ஹிந்துஸ்தானத்துக்குப் புத்துயிர் அளித்த செம்மல், கருணையே யுருவாய காளி உபாசர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரது குருபூசை இன்றையத்தினம் அகிலமெங்கும் கொண்டாடப்படுகிறது.

காயாவி லினிதமர்ந்தே காதினியைச் சரக்குங்
கதாதாரின் கருணைநிறை கருச்சேர்ந் தானைச்
சேயாய்த் திருப்பெயரா சூடி ஞானச்
ஸ்ரீராம கிருஷ்ணனெனத் தேவர் போற்ற
ஓயாது காளியன்பில் உருகி ஞான
உலகுக்கு உய்யுநெறி காட்டி ஞானத்
தாய்போலத் தாணியைஆள் தயாளன் றன்னைத்
தட்சணேசு வரத்திலெனறங் காண லாமே.

காமர்புகூர் தனிலுதித்த கண்ணன் கண்டாய்
கதாதாராம பிள்ளைப்பேர்ப் பெருமான் கண்டாய்
சேயமுடன் உலகுய்யச் செனித்தோன் கண்டாய்
செனமநோய் தீர்த்தருளுஞ் செம்மல் கண்டாய்
வாமமதில் சாரதையை வைத்தான் கண்டாய்
வருந்துவார்க் காரமுத மானான் கண்டாய்
நாமமது ஸ்ரீராம கிருஷ்ண னென்ன
நாற்றிசையும் போற்றிசெய்யும் நம்பன் தானே.

மங்களம்

ஸ்ரீராம கிருஷ்ணருக்கு ஜெயமங்களம்—திவ்ய
செங்கமல பாதருக்குச் சுபமங்களம்.

காளி உபாசருக்குக் கருணையுரு வானவர்க்கு
வாழி என்றே வையம் வாழ்த்தும் வரதருக்கு (ஸ்ரீராம

முக்கணி கடாட்சத்தால் மூவாசை கொன்றவர்க்கு
தக்கணேஸ்வரத் திருந்தே தாரணியை வென்றவர்க்கு (ஸ்ரீராம)

சாரதை மணாளருக்குச் சர்வமத தாசருக்கு
பாரதத்தை உய்யவைத்த பரமஹம்ஸ தேவருக்கு (ஸ்ரீராம)

### ஸ்ரீ பரமஹம்சரின் வாக்குகள் சில வருமாறு:

1 வீடு கட்டும்போது சாரம் அவசியம் வேண்டியிருக்கிறது. அவ்வீடு கட்டி முடிந்துவிட்டால் சாரத்தைத் தேடுபவர் யாருமில்லை. அதுபோல, ஆரம்பத்தில் விக்ரகாராதனம் அவசியமாக விருக்கிறது. பின்னால் அவசியமில்லை.

2 சிவம், சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்கு அத்தியாவசியமானவை. உலர்ந்துபோன களிமண்ணை வைத்துக்கொண்டு எந்தக் குயவனாலும் சட்டிபண்ண முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும். அதுபோல, சக்தியினுடைய உதவியில்லாமல் சிவனால் மட்டும் சிருஷ்டிசதொழில் நடைபெறாது.

3 எரிந்து கருகிப்போன கயிறு, தன் பழைய உருவத்தோடிருந்தாலும்; ஒன்றையும் கட்டுவதற்குஉதவாது. பிரம்மஞானத்தால் எரிக்கப்பட்ட அகங்காரமும் அப்படிப்பட்டதே.

4 சர்க்கரையையும் மண்ணையுங் கலந்து வைத்தால், எறும்பு மணலைத் தள்ளிவிட்டுச் சர்க்கரையை மட்டும் இழுத்துச் செல்கின்றது. அதுபோல, பரமஹம்சர்களும் தீயோரைவிட்டு நல்லோரைப் பொறுக்கி எடுத்துவிடுகின்றனர்.

5 கடவுள் உருவமற்றவரும் உருவமுள்ளவருமாவார். உருவம் அருவம் இவ்விரண்டையும் கடந்தவருமாகிறார். அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவரேதான் முற்றிலும் அறிவர்.



## ‘ருஷ்யவெறி’

### மூன்றாம் யுத்தத்துக்கு ஆயத்தம்

ருஷியாவின் ஏகாதிபத்திய வெறியினால் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் மூன்றாம் உலக யுத்தத்தைச் சமீபத்திற் கொண்டுவருகிறது என்று யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் பிரதமமந்திரியாயிருந்தவரும், இப்போது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராயிருப்பவருமான திரு வின்ஸ்டன் சேர்ச்சில் சென்ற திங்கட்கிழமை லண்டனில் நிகழ்ந்த ஓர் தேர்தற் கூட்டத்திற் படிக்கப்பட்ட ஓர் செய்தியிற் குறிப்பிட்டார். அச்செய்தியில் திரு சேர்ச்சில் குறிப்பிட்டதாவது:

“எங்கள் உள்நாட்டு விவகாரத்திலாக, வெளிநாட்டு விவகாரத்திலாக, நாங்கள் ஓர் பயங்கரமான நிலையை அணுகிக்கொண்டே போகிறோமென்பதை இங்கிலாந்திலுள்ள சகல ஆடவரும் பெண்களும் உணர்ந்திருப்பர். உள்நாட்டிலே வறுமையும செல்வக் குறைவும் ஏய்மை நோக்கி வருகிற [illegible] மாத்திரமா? ருஷிய ஏகாதிபத்திய அக்கிரம வாதிகளின் ஒவ்வொரு செயலும், சமதர்மிகளின் ஒவ்வொரு பலாத்காரக்கருமமும் சதியாலோசனையும், ஓர்பொல்லாத பயங்கரமான மூன்றாவது உலக மகாயுத்தத்துக்கு நம்மைக் கொண்டுபோய்ச்சேர்க்கின்றன”

## அரசாங்க உதவி

நீர்கொழும்பிலே நாலு பிள்ளைகளை ஒரேபிரசவத்தில் பெற்ற ஆனசில்வா என்னும் பெண்ணுக்கு அரசாங்கம் உதவி செய்யலாம் என்று ஓர்செய்தி கூறுகிறது. 4 பிள்ளைகளில் ஒருபிள்ளை இறந்துவிட்டது. மற்ற மூன்று பிள்ளைகளும் தாயும் சுகமேயிருக்கின்றனர். இப் பெண்ணின் புருஷன் ஓர் புகையிலைச் செய்கையாளனும் இதற்கு முன்னும் இவர்களுக்கு 4 பிள்ளைகளுண்டு. இவர்களுடைய வருமானம் குடும்ப சீவியத்துக்குப் போதாது. ஆகவே, அரசாங்கம் தலையிட்டுப்பண வுதவி செய்யும் என்று நம்ப இடமிருக்கிறது. இதற்கான முயற்சிகள் செய்யப்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து௵
மாசி மீ ௨௯ உ வெள்ளிக்கிழமை

## ஆசிரியர் கலாசாலை

எச்சமயவாதிகளுந் தத்தம் சமயத்தை விருத்தி செய்தற்கு மூலகாரணமாயுள்ளவர்கள் அவ்வச் சமயத்து உபாத்தியாயர்களாவரெனக் கூறல் மிகையாகாது; ஆனதினற் சைவவித்தியாசாலைகளிற் சைவப் பிள்ளைகளைப் பயிற்றும் ஆசிரியர்கள் சைவ சமயநூலுணர்ச்சி உடையவர்களாகவும் சைவசமய அநுஷ்டான முடையவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்பது ஆவசியகமாகும்; பயிற்றப்படும் பொதுக் கல்வியோடு சமயக் கல்வியும் உடன் பயிற்றப் படுமானல், சைவாநுஷ்டானமும் அந்த உபாத்தியாயர்களால் சிறு பிராயந்தொட்டு அநுட்டிக்கப்படுமேயானல், அவர்களே காலகதியிற் சிறந்த சைவ உபாத்தியாயர்களாகப் பயனளிப்பரெனக் காத்திருக்கலாகும்.

உண்மையான சைவ உபாத்தியாயராக ஒருவர் வரவேண்டுமானல், அவர் சைவ ஆசிரியர் கலாசாலையிலேயே பயின்று உபாத்திமைப் பரீட்சையிற் சித்தியடைதல் வேண்டும்; சைவ ஆசிரியர் கலாசாலையிற் சைவ சமயநூற் கல்வியும் அநுஷ்டானமும் பிரதான குறிக்கோளாயிருத்தலும் வேண்டும். இங்ஙனமின்றி, சைவ ஆசிரிய மாணவர்கள் அந்நிய மார்க்கத்தினரால் வைத்து நடத்தப்படும் ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து படித்து உபாத்திமைப் பரீட்சையிற் சித்தியடைந்து பின் உபாத்தியாயர்களாகப் படிப்பிக்கத் தலைப்படுதலினல் நேர்ந்துவரும் அநர்த்தங்கள் பலவெனலாம். சைவ ஆசிரிய மாணவர்கள் அந்நிய மதத்தினரால் நடத்தப்படும் ஆசிரியர் கலாசாலைகளிற் சேர்ந்து படிக்கவேண்டி நேர்ந்த காரணம், ஆசிரிய கலாசாலைகளிற் குறித்த ஒரு தொகைக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து படிப்பதற்கு இடமில்லையென்ற பிரமணமேயாகும்; இந்தக் கட்டுப்பாட்டினற் பல சைவ ஆசிரிய மாணவர்கள் ஆண்களும் பெண்களும் அந்நிய மார்க்க ஆசிரிய கலாசாலைகளுக்குப் படிக்க இடந்தேடிப் போனமையும், அதனுற் சமயம் மாறியமையும் இன்னபிற கெடுதிகளும் இப்பொழுதுவெளிப்படையாகக் காணத்தக்கன. சைவசமய ஆசிரிய மாணவர்களைப் பிறசமயத்திற்கு இழுப்பதையிட்டுப் பல முறையீடுகள் காலந்தோறும் இப்பத்திரிகையில் வெளியிடும்படி வந்துமுள்ளன.

ஆனல், இப்படியான விபரீதங்களெல்லாம் அறவே ஒழிக்கு விடும் வண்ணமே, வித்தியாதிகாரிகள் 1945 ம் ஆண்டு வகுக்கப்பட்டபுதியகல்வித்திட்டத்தின்படி, ஆசிரிய கலாசாலைகளிற் பயிலும் மாணவர்கள் தொகையைக் கட்டுப்படுத்துதலாகிய பொருந்தாப் பிரமாணத்தைத் தவிர்த் திருந்தனர்; ஆனல், அந்தத் திருத்தப் பிரமாணம் இந்த 1948 ம் ஆண்டு தொடக்கமாகவே அநுசரணையில் வரலாயிற்று; திருத்தப் பிரமாணத்தின்படி, எந்த ஆசிரிய கலாசாலையிலாவது 100 மாணக்கருக்குக் குறையாமற் சேர்ந்து கல்வி பயிற்றப்படல்வேண்டும்; அத்தொகைக்குக் குறைந்தால் அக்கலாசாலை ஆசிரியர்கலாசாலையாக அங்கீகாரம் பெறமாட்டாது; மேலும் குறைந்த தொகை 100 மாணவரேனு மிருத்தல்வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல், கூடிய தொகை எவ்வளவென்ற கட்டுப்பாடு அத் திருத்தப்பிரமாணத்தில்லையாகும்.

இந்தப் பிரமாணத்தை இன்னமும் சைவமக்களுட் சில பெற்றூர் பாதுகாப்பாளர் விளங்கிக் கொள்ளாதபடியால், தங்கள் பிள்ளைகளை அந்நியமத ஆசிரிய வித்தியாசாலைகளிற் சேர்த்துப் படிப்பிக்க முயலுகிறார்கள்; இப்பொழுதுள்ள திருத்தப் பிரமாணத்தின்படி, சைவ ஆண் பிள்ளையாக, பெண்பிள்ளையாக, சைவாசிரிய கலாசாலைகளிலேனும், அரசினர் ஆசிரிய கலாசாலைகளிலேனும் சேர்ந்து உபாத்திமைத் தொழில் பயிலலாகும். இவ்விஷயத்தில் இனிமேல் தடுமாற்றம் வேண்டாம்; சைவாசிரிய கலாசாலைகள் எத்தொகையான மாணவர்களையும் ஏற்று ஆசிரியவகுப்பு வைத்து நடத்திச் சித்தி பெறுதற்கான நிலைமையில், அச் சைவாசிரிய கலாசாலைகட்குப் பொருளுதவி செய்து அவற்றை நன்னிலைப் படுத்துதல் சைவாபிமானிகள் ஒவ்வொருவர் மீதும் பொறுத்த கடனுகும்.

# பரமஹம்சர் காட்டிய வழி

( க. நவரத்தினம் )

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தின் பெருமை பொருந்திய மகரிஷிகளின் பரம்பரையில் தோற்றிய ஞானச்சுடர் விளக்காகிய பரமஹம்ச தேவரை அறியாத அல்லது கேள்விப்படாத இந்துக்கள் இக்காலத்தில் சிலரேயாவர். பண்டைக்காலத்தின் ஞானக்களஞ்சியமாக விளங்கும் உபநிஷத்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிய மகரிஷிகளைப் போன்று, இக்கால உலகத்திற்கு வேண்டிய சமரசஞான நெறியை அளித்த பெருமை ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கே உரித்தாகும.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் இரண்டுவிதமான கொள்கைகள் மக்கள் மனதை அல்லல்படுத்தியன. ஒன்று கடவுள் வணக்கமும், சமயகொள்கைகளும் மனிதனின் மயக்க அறிவின பயனல் ஏற்பட்ட ஒருவித வாழ்க்கைநிலை என்பது; இக்கொள்கைக்கு மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரப் புலவர்களும், அவர்களது ஆராய்ச்சிமுடிபுகளும் பெருந்துணைபுரிந்து வந்தன. மற்றையது சமயக்கணங்களுக்குள் ஆவர்களது கொள்கைகளுமாம். மேலைத்தேசத்திலும், இந்தியாவிலும் உள்ள சமயக் கணங்கள், தங்கள் தங்கள் சமயக்கோட்பாடுகள் சிறப்பு வாய்ந்தன வென்றும், அக்கோட்பாடுகளின் வழி நின்று ஒழுகினல் மாத்திரமே முத்திநிலை சித்திக்கும் என்றும் சாதித்தனர். இவ்விருவித கொள்கைகளால் உலகத்தில் நாஸ்திகம் ஒருபுறத்தில் வளர்ந்தது; வேறொருபுறத்தில் சமய நம்பிக்கையுடையோர் மத்தியில் சமயச் சண்டைகளும், வேற்றுமையும் மலிந்தன; இந்த நெருக்கடியான நிலையில்தான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் உலகில் தோற்றினர். கடவுளே உண்மைப்பொருள் என்பதையும, எல்லாச் சமயங்கள் மூலமாகவும் அப்பரம்பொருளை அடைதல் சாலுமென்பதையும், அவர் தமது வாழ்க்கையில் அநுபவமுறையில் உலகிற்கு எடுத்து விளக்கினர்.

சமயக்கணக்கரில் சிலர் எல்லாச் சமயங்களும் கடவுளை அடைதற்குப் படிகளாக அமைந்துள்ளன வென்றும், தங்கள் சமயமே கடைசியாக அமைந்துள்ளபடியாதலால், அதன் மூலம் மாத்திரமே உண்மை அநுபவம் கைகூடும், என்றும் கூறுவார்கள். இக்கருத்து எல்லாச் சமயங்களையும் ஏற்கும் மனப்பான்மையை ஒரு சிறிது மக்களுக்கு அளிக்கும் ஆயினும், எல்லாச் சமயங்களும் தமது சமயத்திற்கு ஒருபடி குறைந்தனவென எண்ணும் மனப்பான்மையையும் உடன்வளர்க்கும் சாதனமாகவும் அமைந்துள்ளது. ஆனல் ஸ்ரீ இராமகிருஷ்ணரும், அவர்வழி நின்று வாழ்ந்த ஸ்ரீ விவேகானந்தரும், ஸ்ரீ மகாத்மாகாந்தி யடிகளும் எடுத்து விளக்கிய பெரிய உண்மை எதுவெனில், எல்லாச் சமயங்கள் மூலமாகவும் ஒரு உண்மைப்பக்தன் பரிபூரணமாக இறைவன் திருவடியை அடைதல்கூடு மென்பதேயாம்.

—வரும்

சென்ற ஜனவரி மாதத்திலே இலங்கையில் இறக்குமதியான பொருள்களின் பெறுமதி ரூபா 90,357,548; ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் பெறுமதி 93,[illegible]67,[illegible]92.

0 0 0

சென்றவாரம் நாரந்தனையைச் சேர்ந்த பஸ்தியாப்பிள்ளை ஜேக்கப் என்பவரின் பிரேதம் பல கத்திவெட்டுக் காயங்களுடன் ஓர் தெருவோரத்தில் ஊர்காவற்றுறைப் பொலிசாராற் கண்டுபிடிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக நால்வர் சந்தேகத்தின்பேரில் சிறையாக்கப்பட்டிருக்கின்றனர்.

# மாமிசமும் பௌத்த குருமாரும்

## மகாத்மாவுடன் நிகழ்த்திய மாத்தறைச் சம்பாஷணை

1927-ம் ஆண்டு மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது, தென்கோடியில் இருக்கும் மாத்தறைக்குப் போனர். அங்கே மாகாணத் தலைவராகவிருந்த ஸ்ரீஜுத் எம். பிரஸாத்தின் இல்லத்தில் தங்கியிருந்தபோது பௌத்த குரவர்மாரில் மிகப் பிரபலமான சிலர் அடிகளிடம் வந்து தரிசித்தனர். இப் பௌத்த குரவர்மாருக்கும் அடிகளாருக்கும் சமய சமூக விஷயமாக நடந்த சம்பாஷணையை திரு. ஜே, ஏ. வில் பெரீரா என்பவர் மிகவும் அழகாக கொழும்பு ரைம்ஸ் பத்திரிகையில் வர்ணித்தெழுதியிருக்கிறர். அக்கட்டுரையின் சாரம வருமாறு:

பௌத்த மதத்து மூன்று பிரிவுப் பிரதம குருமாரும அங்கே வந்தபோது, அங்கே கிறீஸ்தவ குருமாருமிருந்தனர். ஓர் முஸலீம்மௌல்வியுமிருந்தார். ஆரம்ப நமஸ்காரம் பரஸ்பரம் வழங்கிக்கொண்ட பின், ராட்டையில் நூல் நூற்றபடியே மாத்மா பின்வரும் கேள்விகளை பௌத்த குருமாரிடம் கேட்டார்:

மகாத்மா: பௌத்த சமயத்திலே அநேக பிரிவுகள் உண்டு எனச் சொல்லுகிருர்கள்; இது உண்மைதானே.

பௌ. குருமார்: ஆக மூன்றே மூன்று பிரிவுகள்தான் உண்டு.

மகாத்மா: ஏன் இப்படி மூன்று பிரிவுகள் இருக்கவேண்டும்? ஒன்றேயொன்றுதான் இருக்கவேண்டு மல்லவா?

பௌ. குருமார்: பல காலமாக இப்படிப் பிரிவுகள் இருந்திருக்கின்றன.

மகாத்மா: நீங்கள் ஒற்றுமைப்படவேணும்: ஒற்றுமைதான் பலந்தரும்; அதுபோக, நீங்கள் உங்களுடைய ஓய்வு நேரத்தை எப்படிப் போக்குகிறீர்கள்?

பௌ. குருமார்: நாங்கள் எங்களுடைய பௌத்த சமயசம்பந்தமான நூல்களைப் படிக்கிறேம்; ஆராதனைப் பிரசங்களைத் தயார் செய்வோம்; எங்களிடம ஆறுதலுக்கும் உதவிக்கும் வரும் பொது ஜனங்களுக்குப் புத்திமதி சொல்வோம்; பௌத்த குருமார செய்ய வேண்டியதின்ன வென்று அறிவுறுத்துவோம், தியானிப்போம்:

மகாத்மா: நீங்கள் ஒருபோதும் வாளாவிருப்பதில்லையா?

பௌ. குருமார்: சில சமயங்களில் அப்படியு மிருப்போம்.

மகாத்மா: அப்படி வேலையற்று வாளாவிருக்கும்போது தீயகருமங்கள் உங்கள் புலன்களில் செல்வதில்லையா?

பௌ. குருமார்: (மறுமொழி யில்லை)

மகாத்மா. ஏன் மௌனமா யிருக்கிறீர்கள்: என் கேள்விக்கு நீங்கள் விடை [illegible]

பௌ. குருமார்: ஆமாம்; சில சமயங்களில அப்படித் தீய விஷயங்களிலும் எம் புலன்கள் செல்லும். கடைசியாகப் பார்க்கப்போனல் நாங்களும் சிற்றறிவு சிறு தொழிலுமுடைய மனுஷர்களே.

மகாத்மா: அப்படியான ஓய்வு நேரங்களில் ஏதும் பயன்தரும் கருமங்களில் நீங்கள் ஏன் ஈடுபடக்கூடாது? அப்படி ஈடுபட்டால், தீய கருமங்களில் உங்கள் புலன் செல்லா தல்லவா?

பௌ. குருமார்: ஓய்வு நேரங்களில் என்ன நல்ல கருமத்தைச் செய்யலாம் என்பது எங்கள் புத்தியிற் படவில்லை

மகாத்மா: ஏன், நீங்கள் பூமி திருத்தியுண்ணலாமே; உங்கள் கோவில்களுக்குரிய விளைநிலங்களைப் பண்படுத்திப் பயன் பெறலாமே.

பௌ. குருமார்: நாங்கள் அப்படிப் பூமி திருத்தினல் நாங்கள் உயிர்க்கொலை செய்யவேண்டி யேற்படும். அந்த உயிர்கள் மிக அற்பமான போதிலும் அவற்றைக் கொல்லுவோம்தான். (பூமி திருத்தும் போது பூச்சி புழுக்களை நாசமாக்குவதை இக்குரவர்மார் குறிப்பிட்டனர் போலும்)

மகாத்மா: நல்லது: அப்படியானல் நூல்நூற்று நெசவு செய்யலாமே.

பௌ. குருமார்: எங்களுக்குப் பருத்தி கிடைக்காது. நூல்கிடைக்காது: நூல் நூற்பதற்கோ, நெசவுக்கோ வேண்டிய உபகரணங்கள் கிடையா.

மகாத்மா: நானே உங்களுக்குப் பருத்தியும் ராட்டினமும் அனுப்பினல் அப்போது நூல் நூற்பீர்களா? நூலும் நெசவுக்கான உபகரணங்களும் அனுப்பினல் நெசவு செய்வீர்களா?

பௌ. குருமார்: (மறுமொழி யில்லை).

மகாத்மா: ஏன் நீங்கள் மறுமொழி தருகிறீர்கள் இல்லை. என் கேள்விகளுக்கு நீங்கள் விடைதர வேண்டும்.

பௌ. குருமார்: ஆகட்டும். (அதாவது மகாத்மா அனுப்பினல் தாம் அவர்கூறியபடி செய்வதாகச் சொன்னர்கள்).

(மகாத்மாவின் இந்தக் கேள்விக்குப் பௌத்தகுருமார் அளித்த விடையைக்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் இரண்டுபட்டால் நடப்பது என்ன?

## கூத்தாடிக்குக் கும்மாளம்

## தமிழர் சமூகத்துக்கு ஓர் வேண்டுகோள்

....... ஸ்ரீதரன் .......

இன்று தமிழ்ச் சமூகத்துக்கு வேண்டியது என்ன? ஒற்றுமை; ஒற்றுமை; பூரண ஒற்றுமை; இந்த இலங்கையின் வருங்கால நிலைமையில் தமிழ்மக்கள் உஜ்ஜீவிக்க வேண்டுமானால், தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் விளங்க வேண்டுமென்று கட்டுரையாளர் அபிப்பிராயப்படுகிறார்.

வருகிற 20-ந் திகதி கொழும்பிலே தேசியத்தமிழர் மகாநாடொன்று கூட்டப்பட திட்டம் வகுத்திருக்கிறார்கள். இலங்கைமக்கள் அனைவரும் ஒற்றுமையாயிருத்தல் வேண்டும்; அந்த ஒற்றுமையை வளர்த்தற்கான வழிவகைகளைக் கையாளுதல்; ஒரே இலங்கை என்னும் இன்னோரன்னவையே இத்தேசியத்தமிழர் மகாநாட்டின் லட்சியங்கள். இந்த லட்சியங்கள் சாலவும் சிறந்தன வென்பதை எத்தமிழ்மகனும் மறுக்க முன்வரமாட்டான்: இந்த இலங்கையில் வாழும் சமூகத்தினர் அனைவரும், சிங்களர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் என்ற பேதத்தை அரசியல் பொருளாதார வாழ்வில் அகற்றி, அந்த வாழ்க்கையிலே எல்லாரும் ஒரே ஈழமணித்தாயின் புதல்வர்கள் என்ற ஹோதாவில் நடக்கவேண்டும், என்பதில் தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமைகொண்டிருக்கிறார்கள் இந்த நல்ல நோக்கங்களோடுதான் தேசியத்தமிழர்மகாநாடு அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது. இந்த முயற்சியில், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பல பிரபல தமிழ்மக்கள் பங்கு எடுத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய நோக்கமோசாலச்சிறந்தது; இவர்களுடைய லட்சியமோ இன்னும் சிறந்தது. ஆனால் இவர்கள் தாம் கொண்ட நோக்கத்தைப் பூர்த்தியாக்க தம் லட்சியத்தை யடைய ஓர் தேசியத் தமிழர் மகாநாட்டை அங்குரார்ப்பணம் செய்வதில் ஆசங்கை பிறக்கின்றது.

○

இலங்கையிலே தமிழ்மக்கள் எண்ணிக்கையில மிகவும்குறைந்தவர்கள்: ஏறக்குறைய 65 லட்சம் மக்களில், இலங்கைத்தமிழர் தொகை 8 லட்சத்துக்குமேல் இல்லை எனலாம்: அப்படிப்பட்ட அற்பத்தொகையினராகிய நாம் எமக்குள்ளே இன்னும் பிரிவினையை ஏற்படுத்தலாமோ என்பதுதான் கேள்வி. இன்றுள்ள நிலைமையிலே தமிழ்ப் பொதுமக்கள் தங்களின் கொள்கை எதுவென்பதைச் சென்ற பொதுத் தேர்தலிற் பட்டவர்த்தனமாக ஐயந்திரிபறத் தெரிவித்துவிட்டனர். எது எப்படியிருந்தபோதிலும், அகில-இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஒன்றின்மீதுதான் தமக்கு அபாரமதிப்பும் நம்பிக்கையும் உண்டு என்பதைத் தமிழ் மகாஜனங்கள் தெரிவித்துவிட்டனர். வடமாகாணத்தில் தமிழ்க்காங்கிரஸின் அபேட்சகராக 8 பேர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் 6 பேர் மகத்தான வெற்றி பெற்றனர். தமிழ்க்காங்கிரஸின் ஆதரவுபெற்ற இன்னொருவரும் வெற்றியுற்றார். இப்படி வெற்றியடைந்தவர்களில் 5க்கு மேற்பட்டவர்கள் அரசியல் வாழ்வுக்குப் புதியவர் இவர்களிற் சிலரை வாக்காளர் முன்பின் அறியாதவர்கள். அப்படியிருந்தும் பொதுஜனங்கள், இவர்களுக்கு வெற்றி கொடுத்துத் தமிழ்க் காங்கிரசின்மீது தமக்குள்ள அமோகமான நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். பழைய பெருச்சாளிகள் கின்றவிடம் தெரியாமல் மறைந்தன. செல்வமும், செல்வாக்கும் அதிகாரமும் பாரம்பரைச் சிறப்பும், இந்தத் தேர்தலில் சின்னாபின்னமாகின. இதனை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். தமிழ்மக்கள் கண்ணை மூடிக்கொண்டு தம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவில்லை விஷயம் முழுவதையும் இரண்டுபக்கத்துச்சார்பிலும் நன்கு விளக்கி, விளங்கியபின்னரே, கண்ணைத் திறந்துகொண்டுதம் வாக்குச் சம்மதத்தையளித்தனர் அப்படி அளித்ததன் மூலமாக தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதித்துவதன்மையைப் பலப்படுத்தினர்.

○

அகில-இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் நோக்கம் என்ன? லட்சியம் என்ன? அதன் நோக்கமும் லட்சியமும்; முன்கூறிய தேசியத் தமிழர் மகாநாட்டின் நோக்கத்தையும் லட்சியத்தையுமே ஒத்திருக்கின்றன இந்த இலங்கை எல்லார்க்கும் பொது என்று தேசியத்தமிழர் கூறுகின்றனர்; அதனையே தமிழ்க்காங்கிரசும் கூறுகிறது இத்தேச அரசியல்வாழ்க்கையிலே சமூகப்பாடு ஆகாது என்கின்றனர் தேசியத்தமிழர்; அதனையே தமிழ்க்காங்கிரசும் கூறுகிறது. நான் ஆராய்ந்தமட்டில், இந்த இரண்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆட்களில்தான் வித்தியாசம் தெரிகிறதேயொழிய, அவற்றின் கொள்கையில் மார்க்கத்தில், லட்சியத்தில் பேதத்தைக் காணமுடியவில்லை. தமிழ்க்காங்கிரசில் உள்ளவர்களில் எந்தத் தமிழ் இரத்தம் ஓடுகிறதோ அந்தத் தமிழ் இரத்தம்தான் தேசியத்தமிழர் நாம்பிலும் செறிந்தோடுகிறது. தேசியத் தமிழரிடம் எவ்வளவு தேசீயம் இருக்கிறதோ, அவ்வளவு தேசீயம், தமிழ்க்காங்கிரசிடமும் உண்டு. இந்த உண்மையை இருசாராரும் இனியேனும் உணர்ந்துகொள்ளுதல் நலம். இது 20-ம் நூற்றாண்டு: உலகெங்கும் ஜனநாயக ஆட்சி நிலவும் காலம்: அரசியல் என்பது குறிப்பிட்ட ஓர் சிலர்க்குத்தான் என்ற காலம் மலையேறிவிட்டது. இன்று பொதுஜனங்களால், பொதுஜனங்களுக்காக அரசியல் நிர்வகிக்கப்படுகிறது. எனவே குறிப்பிட்ட ஓர் சிலர் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாகக் கிளர்ச்சிசெய்யவோ, கிளர்ச்சிசெய்ய முயற்சிக்கவோ நினைத்தல் புத்தியின்பாற்படாது.

○

தமிழ்மக்களுக்கு இன்று வேண்டியது ஒற்றுமை; பூரண ஒற்றுமை, அங்கொருகட்சி இங்கொரு கட்சியாகச் சிதறி நிற்றல் தமிழ்ச் சமூகத்துக்கே பேராபத்தாக முடியும். தமிழ்க்காங்கிரசின் போக்கு ஓர் சிலர்க்குப் பிடிக்காமல் இருக்கலாம்; ஜீ. ஜீ. யின் தலைமையிற், சிலர்க்குத் துவேஷமோ வெறுப்போ ஏற்பட்டிருக்கலாம், "தமிழ்" என்னும் பதம் வகுப்புவாதத்தைக் குறிப்பிடுகிறது எனவும் சிலர் [illegible]

## அண்ணல் உயிர் நீத்த ஸ்தலம்

### தினமும் பூசிக்கப்பட்டு வருகிறது

ஹிந்து-முஸ்லிம்ஒற்றுமைக்காக, மானிடவர்க்கத்தின் சுபீட்சத்திற்காக, அல்லும் பகலும் உழைத்து வந்த அண்ணல் காந்தி அடிகளின், இருதயத்தை, பிர்லா மாளிகையில் கொலைகார கோட்ஸேயின் வன் குண்டுகள் ஊடுருவியபோது பீறிட்டுச் சிந்திய அண்ணலின் புனித இரத்த வெள்ளத்தினால் தூய்மைபெற்ற ஸ்தலத்தில் பீடமொன்று எழுப்பப்பட்டுள்ளது. அவர் தரையில் பிரக்ஞை யற்று விழுந்த தருணத்தில் அவரது வாயினின்றும் கடைசிவெளிப்பட்ட "ஹே...ராம்" என்ற வார்த்தைகள் அப்பீடத்தினை அழகு செய்கின்றன. அதோடு அவர்தரையில் சாய்ந்த நேரமும் (1948-ம் வருஷம் ஜனவரி மாசம் 30-ந் திகதி மாலை 5-17 மணி என்று) பொறிக்கப்பட்டுள்ளது.

பீடம் தினமும் புஷ்பங்களால் அலங்காரம் செய்யப்படுவதோடு, சாம்பிராணி தூபமும் காட்டப்படுகிறது.

## யாழ்ப்பாண முனிஸிப்பற்சபை

இந்த ஆண்டு முடிய, யாழ்ப்பாணம் முனிசிப்பற்சபைக்கான தேர்தல்கள் நடைபெறவேண்டும், அதற்குவாக்காளர்இடாப்பு தயாராகவேண்டும், வட்டாரங்கள் வகுக்கப்படல்வேண்டும்; இவையெல்லாம் வருகிற ஏப்பிரல் மாதத்துக்குமுன் செய்யப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. பொன்னம்பலம் ஸ்தலஸ்தாபன அதிகாரிக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறார். அதற்கான கருமங்களைச் செய்வதில் தம் முயற்சிசெய்வதாக ஸ்தலஸ்தாபன அதிகாரி திரு. பொன்னம்பலத்துக்கு விடையனுப்பியிருக்கிறார்.

## மாவுக்கு மட்டும் 14 கோடி ரூபா

### மந்திரி தெரிவிக்கும் விபரம்

இன்னும் பத்து வருஷ காலத்திற்குள் உணவுத் துறையில் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இலங்கையை ஆக்கவேண்டு மென்பதே தமது உறுதி என்று உணவு மந்திரி ஸ்ரீ எ. ரதனயக்கா ஒரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

மாவுபற்றிப் பிரஸ்தாபித்தபோது அதற்குப் பதிலான உணவுப்பொருள் ஒன்றைக் கண்டுபிடிக்க இரண்டு வருஷ திட்டமொன்றும் மாவு இறக்குமதியினால் விளையும் நஷ்டத்தைக் குறைக்க மூன்று வருஷத் திட்ட மொன்றும் தயாரித் திருப்பதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பிரதி வருஷம் 14 கோடி ரூபா மதிப்பான கோதுமை மாவு நாம் இறக்குமதி செய்கிறோம். அதை மிகமிகக் குறைப்பது எனது திட்டம்.

இப்போது ஒவ்வொருமாதமும் 17000 டன் மாவு செலவாகிறது. அவ்வளவுக்கும் நாம் 1 கோடியே 10 லட்சம் ரூபா கொடுக்கவேண்டி யிருக்கிறது.

மந்திரி தொடர்ந்து பேசுகையில் மக்கள், கோதுமை மாவை அத்தியாவசிய உணவுப் பொருளாகக் கருதாதநிலைமையை உண்டுபண்ணினால் மாவு இறக்குமதியாளர்கள் தாங்களாகவே விலைகளைக் குறைப்பார்கள் என்ற நம்பிக்கை வெளியிட்டார்.

பர்மா விஜயத்தைக் குறிப்பிட்டு நல்லெண்ணத் தூதாகவே அங்குதாம் செல்வதாகவும், அங்கு ஒருவேளை இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்வதுபற்றிப் பேச, சந்தர்ப்பம் எழலாம் என்றும் கூறினார்.

# பெண்கள் எழுச்சி

## 7 கோரிக்கைகள் சமர்ப்பணம்

இலங்கையின் அரசியல் வாழ்க்கையில் ஆண்கள்தான் பரஸ்பரம் அபிப்பிராயபேதம் கொண்டு ஒன்றுக்கொன்று முரணான அரசியற் கொள்கைகளைப் பரப்பி, தத்தம் கட்சியே சரி என்று வாதிட்டுவரும் இக்காலத்திலே பெண்கள் அனைவரும் அரசியல் விஷயமான அபிப்பிராயபேதம் எதுவுமில்லாமல் ஒரேகொள்கையுடையவர்களாய் ஓர் ஸ்தாபனத்தைத் தாபித்திருக்கிறார்கள். அதன் பெயர் மாதர் ஐக்கிய முன்னணி. சமசமாஜிகள் தலைவர் டக்டர் விக்ரமசிங்ஹாவின் மனைவி, சமசமாஜி திரு. லெஸ்லி குணவர்த்தனவின் மனைவி, பெரும் முதலாளிமாரின் மனைவியர் இவர்களெல்லாரும் வகுப்புவாதமற்ற இந்த சோஷலிஸ்ட் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கிறார்கள். இவர்களுடைய கொள்கை சோஷலிஸம். சென்றவாரத்திறுதியில் இப்பெண்களின் பகிரங்கக் கூட்டம் கொழும்பு நகர மண்டபத்தில் கூடியது. அப்போது அரசாங்கம் உடனே செய்யவேண்டிய 7நிர்ணயங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவையாவன:

(1) இந்த இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் பணாம்மியமாக உண்ணத்தக்க உணவு, அவர்களின் தகுதிக்கேற்றநிலையில் வழங்க அரசாங்கம் உத்தரவாதம் அளித்தல்வேண்டும்,

(2) இன்று வேலையற்றிருக்கும் ஆடவருக்கும் பெண்களுக்கும் தகுதியான, அவர்களின் சமூக தராதரத்துக்கேற்ற வேலை கொடுக்கவேண்டும். அப்படி வேலை கொடுக்கும்வரை அவர்களுக்குப் போதிய பண உதவி கொடுக்கவேண்டும்.

(3) இன்று இலங்கையிலே மரண விகிதம் அதிகரித்து வருகிறது. சிசு மரணம் திடுக்கிடும்படியாக வளர்ந்து வருகிறது. இதற்குப் பிரதான காரணம் மக்களுக்குப் போதிய சத்துள்ள உணவு இல்லாமையே. இந்தக் கேவல நிலைமையைத் திருத்துவதற்கு அரசாங்கம்,

(அ) மாதந்தோறும் 100 ரூபாவுக்குக் குறைந்த குடும்ப வருமானமுள்ள பெண்களுக்கு அவர்களின் பிரசவ காலத்திலே பணவுதவி புரியவேண்டும்.

(ஆ) குடும்ப வருமானம் மாதம் 100 ரூபாவுக்குக் குறைவாயிருந்தால் அக்குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அரசாங்கம் பண உதவிபுரியவேண்டும். அந்தப் பிள்ளைகள் பிறந்தது முதல் 14 வயது வரைக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் இவ்வளவு தொகையென நிர்ணயித்து உதவவேண்டும்.

(இ) பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களைத் தொழிலில் அமர்த்துவோர், அப் பெண்கள் வேலை செய்யும்போது அவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான நிலையத்தை அந்தத்தொழிற்சாலைக்கணித்தாகக் கட்டாயம் வைத்திருக்கவேண்டுமென வேலைவாங்கும்முதலாளிமார்க்கு அரசாங்கம் கட்டளை பிறப்பித்தல் வேண்டும்.

(ஈ) அத்தியாவசியகமான இடங்களில் மிகச் சிறிய பிள்ளைகளைப் பயிற்றுவதற்கான சிசுசம்ரட்சண பாடசாலைகள் முதன்முதலில் ஸ்தாபிக்கப்படல்வேண்டும்!

(4) 55 வயது நிரம்பிய ஒவ்வொரு பெண்ணுக்கும் 60 வயது நிரம்பிய ஒவ்வொரு ஆடவனுக்கும் அரசாங்கம் "பென்ஷன்" கொடுக்கவேண்டும்.

(5) இலங்கை பூராவும் நல்ல, சுகாதாரமான அழகான வீடுகள் கட்டி எல்லா மக்களுக்கும் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

(6) அரசாங்கஊழியர் உட்பட எல்லாத் தொழிலாளர்க்கும் (ஆண்கள் சரி, பெண்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடிதம்

# இவ்வளவு பொறுமையா?

ஐயா,

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து வாரந்தோறும் வெளியாகும் ஓர் தமிழ்வாரப் பத்திரிகையின் சென்ற வார இதழில் "அஸ்தியின் பெயரால் அரசியற்சூழ்ச்சி" என்னும் தலையங்கத்துடன் ஓர் அசம்பாவிதமான கட்டுரை வெளிவந்துள்ளது. அக்கட்டுரை ஒவ்வோர் தமிழ் மகனது மனத்தையும் புண்படுத்தியுள்ளது. எங்கள் கோப்பாய்ப் பிரதிநிதியவர்கள் கூறியாங்கு தேர்தலில் தோல்வியடைந்த அப்பத்திரிகைக் குழுவினர் ஆத்திரமடைந்து "பொறுமை" எனும் பேயாற் பிடிக்சப்பட்டு அக்கட்டுரையை எழுதினார்கள்போலும். இந்திய அரசாங்கம் அஸ்தி கரைப்பதை இலங்கை அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்தது. அரசாங்கம் அஸ்தி கரைப்பதைப் பிரதிநிதிகள்மீது சுமத்தியுள்ளது. தமிழ் மாகாணமாகிய யாழ்ப்பாணத்தில் அஸ்தி கரைக்கும்பொறுப்பு யாழ்ப்பாணப்பகுதிப்பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. நம் தலைவர்கள் தாமேவலிந்துசென்று இப்பணியைச் செய்ய முற்பட்டால் தான் என்னே? அஸ்திகரைப்பதற்குக் குறித்த பத்திரிகை குறிப்பிட்ட பெரியாரிலும் பார்க்க நம் தமிழ்நாட்டுத் தலைவர்களான ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஸ்ரீ செல்வநாயகம, ஸ்ரீ கனகரத்தினம் ஆகியோர் எவ்வகையிலும் குறைந்தவர்களல்லர். இவர்களும் காந்திஜிமீது பக்தியுடையவர்களே. எம் தமிழ்நாட்டுத் தலைவர் ஸ்ரீ ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்கள் காந்திஜீ அஸ்தி கரைப்பு விழாவிற்குத் தலைமைபூண்டது வரவேற்கத்தக்கதும், பொருத்தமானதும் ஆகும்.

"தமிழ்க் காங்கிரஸ்" ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் என்று அப்பத்திரிகை தான் எடுத்துக்கொண்ட முயற்சியைக் கைவிடாது தூற்றிக்கொண்டே செல்கிறது. தமிழ்க் காங்கிரஸ் ஓர் வகுப்புவாத ஸ்தாபனமல்ல என ஸ்ரீ தகநாயக்கா கூறியதையும்மறந்து தமிழ்த் தலைவர்களை குறைத்து எழுதிக்கொண்டு வருவது மிகவும் மனவருத்தத்திற்குரிய செயலாகும்.

"தமிழன்" தனது உரிமையைக் கேட்டால் வகுப்புவாதமா? தமிழர்கள் தனித்து நின்று தங்கள் சமூக உரிமையைப் பெறமுடியுமா? எல்லோரும் ஒன்றுசேரவேண்டும். ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமையின் விளைவு தான் தமிழர்களின் தனிப்பெரும் ஸ்தாபனமாகிய "தமிழ்க் காங்கிரஸ்" இப்படிப்பட்ட ஸதாபனமும் தேவையில்லாதிருக்கலாம். எப்போது? சிங்களத் தலைவர்களாகிய ஸ்ரீ சேனநாயக்கா, ஸ்ரீ பண்டாரநாயக்கா காந்திஜீ, நேருஜீ போன்றவர்களாக இருக்க வேண்டும். தேவை நோக்கி நம் ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டுத் தமிழர்கள் முன்னேற்றம் கருதி உழைத்து வருகிறது.

இவற்றையெல்லாம் அப்பத்திரிகை மறந்து நம் தலைவர்களமீது உள்ள கோபத்தைச் செய்கையளவில் ஏன்? தேர்தல் மூலம்தானும் காட்டவியலாது எழுத்துமூலம் காட்டத் தலைப்பட்டமை விந்தையே, தமிழ்மக்களே! இதற்கு நீங்களே தீர்ப்பளியுங்கள்.

இங்ஙனம்
சே சுப்பிரமணியம்
சரவணை வேலணை

7—3-48

## அறிவித்தல்

அகில இலங்கை தேசீய
தமிழர் மகாசபை

மேற்கூறிய மகாசபையின் முதற்கூட்டம் பங்குனி மாதம் சனிக்கிழமை 20.3.48 ல் நடைபெறும்.

முக்கிய நோக்கங்கள்:

1 ஒருமித்த இலங்கை
2 ஒரே அரசாங்கம்
3 சாதிமத பேதமற்ற உறவு

எல்லாப் பகுதிகளிலு மிருந்து பிரதிநிதிகள் மகாசபைக்கு சமுகம் அளிப்பார்கள்.

மேற்கூறிய நோக்கங்களை ஆதரிப்பவர்கள் யாவரும் கீழ்க்குறிக்கப்படும் காரியதரிசிகளுக்கு தயவுசெய்து அறிவிப்பீர்களாக.

A C. செல்வராசா
N. குமாரசிங்கம்
காரியதரிசிகள்

ஆபீஸ் போன்: 5178
41 1/4 விகடோரியா பில்டிங்
நோறிஸ் றோட்.

M 257 12 3-48

## யாழ்ப்பாண வெங்காயம்

உணவுப்பகுதி அதிகாரி திரு. கே. ஆள்வாப்பிள்ளை அவர்கள் சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தார். கொழும்பில் வெங்காயத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறபடியால், இங்கிருந்து வெங்காயம் அனுப்பும் ஏற்பாடுகளைச் செய்யவே அவர் விஜயம்செய்தார் எனக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இம்முறை ஏறக்குறைய 1000 தொன் வெங்காயம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை இலங்கைமுழுவதுக்குப் ஒரு மாதத்துக்குப் போதுமானதாம்.

கொழும்பு நகரசபைக்கு சுதுவலைத் தொகுதியில் இருந்து திரு. எச் ஜீ எஸ். ரத்னவீர என்னும் சமதர்மவாதி 376 அதிக வாக்குக்கள் பெற்றுத் தேர்தெடுக்கப்பட்டார்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1942 ம் ஆண்டின் 13 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்சம் யாழ்ப்பாணம் வண்மேற்கு க. செ. த செ. செல்லையாபிள்ளை நம்பர் 195 K. K. S. Road அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 26 ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப் படவேண்டிய நகைகளின் விபரம்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 776 | 1945 ஜுன் | 2 | 12 | சிவன்கோவிலடி சின்னப்பு வேலுப்பிள்ளை பொன் 1 கல் இல்லாத வெ கல் மோதிரம் 1 |
| 3234 | டிசம்பர் | 17 | 17 | நீராவியடி இளையவன்கைம்பெண் சின்னம்மா பொன் K N சீல் மோதிரம் 1 |
| 3775 | 1946 ஜனவரி | 23 | 15 | நாவாந்துறை சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை பொன் சிறு ஆடித்தன் மோதிரம் 2 |
| 4544 | மார்ச் | 16 | 150 | சிவன்கோவிலடி குற்றுலிங்கம் சரவணப்பெருமாள் பொன் இமி சி கல் கொண்டைப்பூ 1 |
| 202 | ஏப்ரல் | 12 | 10 | உவைமன்ரோட் நவரெத்தினம் திருஞானசம்பந்தர் பொன் 1 கல் இலாத முத்துக்கல் மோதிரம் 1 |
| 389 | ,, | 24 | 250 | தட்டாதெரு முத்துலிங்கம் செல்வரத்தினம் 13 வயிரச் சன்னம் 1 வெ கல் வைத்த தொடு சோடி 1 |
| 920 | மே | 31 | 25 | நீராவியடி வீரகத்தி கந்தன் பொன் சி கல் கவுத்தோர் 1 |
| 1001 | ஜுன் | 5 | 200 | கடைத்தெரு S J. மனுவல்பிள்ளை பொன் 1 கம்பி & நெளிவளையல் காப்புசோடி 3 |
| 1042 | ,, | 8 | 100 | கடைத்தெரு S. J. மனுவல்பிள்ளை பொன் தொங்கட்டான்1 இல்லாத வெ கல் பெண்டன்டைமன் அட்டியல் 1 |
| 1904 | ,, | 12 | 10 | பரந்தன் 5 ம் வாய்க்கால் நல்லதம்பி பெரியசாமி பொன் ஆடித்தன் மோதிரம் 1 |
| 1282 | ,, | 26 | 40 | உடுவில் W T ரிட்சாட்ஸ் பொன் இமி சி கல் கவுத்தோர்1 |
| 1301 | ,, | 27 | 40 | உடுவில் D J சென்ஸ்மன் பொன் காட்சாதா பெண்டன்1 |
| 1315 | ,, | 28 | 500 | கடைத்தெரு S J மனுவல்பிள்ளை பொன் வெ கல் பென்டனுடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1 பிள்ளைக்காப்பு சோடி 1 சிந்தாமணி & அல்பேட் கைச்சங்கிலி சோடி 2 சலங்கை அரை மூடியுடன் அரைஞாண் கொடி 1 |
| 1459 | ,, | 9 | 200 | K K S றோட் S J மனுவல்பிள்ளை தொங்கட்டான் 2 இல்லாத ஜமி வெ கல் தொங்கட்டானுடன் சவடி முகப்பு 1 தம்பிதோழன் 1 செடிகால் டலர் 1 பச்சைக்கல் 1 இல்லை. |
| 1473 | ,, | 10 | 160 | உடுவில் D J சென்ஸ்மன் சில கல் இல்லாத முத்துக்கல் பென்டனுடன் டைமன் சங்கிலி 1 |
| 2134 | ஆகஸ்ட் | 30 | 60 | சிவன்கோவிலடி குற்றுலிங்கம் சரவணப் பெருமாள் சி கல் மாலைப்பதக்கம் 1 |
| 2140 | ,, | 31 | 150 | சிவன்கோவிலடி குற்றுலிங்கம் சரவணப்பெருமாள் சுரை இல்லாத வெ கல் பென்டனுடன கல் அட்டியல் 1 |
| 3166 | நவம்பர் | 11 | 20 | மானிப்பாய் கணபதிப்பிள்ளை செல்லர் முறிவுகைச் சங்கிலி 1 |
| 3470 | ,, | 30 | 110 | சிவன்கோவிலடி K சரவணப்பெருமாள் நெளிக்காப்பு 1 வளையல்காப்பு 3 நீலக்கல் மோதிரம் 1 |
| 3779 | டிசம்பர் | 18 | 100 | வேலணைகிழக்கு செல்லப்பா சரவணமுத்து 1 சுரை இல்லாத அச்சுக்காப்பு சோடி 1 |
| 3782 | ,, | ,, | 100 | வேலணை கிழக்கு செல்லப்பா சரவணமுத்து செடி முழுப் பவுணுடன் அல்பேட் சங்கிலி 1 |
| 3880 | ,, | 24 | 300 | நாவாந்துறை சவரிமுத்து மலக்கியாஸ் தாலி தடைகளுடன் ஒட்டுக்கொடி 1 கிளாவர் கைச்சங்கிலி 1 |
| 3887 | ,, | ,, | 25 | நாவாந்துறை சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை சிகப்பு கல் புறுதாலி 1 |
| 3965 | ,, | 30 | 50 | முகைதீன்பள்ளிரோட் மு. க. முகமது இபுராஹிம் முகப்பு இல்லாத இளப்பொன் ஒட்டுக்கொடி 1 |
| 3993 | ,, | 31 | 25 | ஆனைக்கோட்டை முருகர் கதிரேசு இமி வெ கல் சிலேட்1 |

விற்பனவு சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 14 ந் தேதி (27-3 48) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படி சடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. AIYAMPILLAI
Retired Udaiyar, Vannarponnai
Auctioner

M 254 9, 12—3—48

## ஊர் இரண்டுபட்டால் நடப்பது என்ன?

3-ம் பக்கத் தொடர்ச்சி

கியாயங்களின் பொருட்டு, தமிழ்மக்கள் நம்பிக்கையும்விசுவாசமும் வைத்துள்ள ஸ்தாபனத்தைப் பலவீனப்படுத்த நினைத்தல் முறையாகாது. இந்த ஸ்தாபனத்தின் போக்கு அநநமாயிருப்பின், அதனைப் பூரணமாக்க வேண்டும். இன்று அதற்குவெளியேயுள்ளவர்கள் அதிற் சேரவேண்டும். தம் கட்சிக்குப் பலம் தேடவேண்டும். தம் கொள்கையை அந்த ஸ்தாபனத்தில் இருந்துகொண்டே பொதுஜனங்களுக்கு அறிவுறுத்தவேண்டும். அதன் மூலமாக இப்போது பிழைகளைச் செய்யும் நிர்வாகிகளை அகற்றிவிட்டுப் புதியமுறையில் அதனை நிர்வகிக்க வேண்டும். தமிழ்க் காங்கிரஸ் பொதுமக்கள் ஸ்தாபனம். அது ஜீ. ஜீ.க்கோ அல்லதுசெல்வநாயகத்துக்கோ சீதனம் அல்லது முதுசொத்தல்ல. என்று பொதுசன அபிப்பிராயம் அவர்கள்கொள்கைக்கு மாறுக உருவாகின்றதோ, அன்றே அவர்கள் அந்த ஸ்தாபனத்தைவிட்டு மாத்திரமல்ல, பாராளுமன்றத்தையும் விட்டு விலகவேண்டும். தமிழ்மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த ஓர் சிலர், தேசீயத் தமிழர்மூலமாகச் சூழ்ச்சி செய்கிறார்கள் என்ற ஓர் அபவாதம் இப்போது சிலகாலமாகப் பரவி வருகிறது. இந்த அபவாதம் ஆதாரமற்றது என்றே நான் நம்புகிறேன். இந்த அபவாதத்துக்கு இடம்கொடுக்காமல் நம் "தேசீயத்" தமிழர் தம் முயற்சியைக் கைவிட்டு, தமிழ் மக்களின் ஓரே ஸ்தாபனமாய தமிழ்க் காங்கிரசிற் சேர்ந்து அதனைப் பலப்படுத்துவராக. "ஊர்இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கும்மாளம்" என்பர்.

## பெண்கள் எழுச்சி

3-ம் பக்கத் தொடர்ச்சி

கள்சரி) தொழிற்சங்கஉரிமைகளும் ஏனைய பிரஜா உரிமைகளும் வழஙகபபடல்வேண்டும். சென்ற ஆண்டு ஜூன்மாதம் நிகழ்ந்த வேலைநிறுத்தத்திற் பங்குபற்றியதன்பொருட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கமர்த்தவேண்டும்.

(7 மேலே சொல்லப்பட்ட சத் கருமங்களைச் செய்வதற்குப் பணம் வேண்டும். அப்பணத்தை நேர்முகவரி (நேர்முகமான வரியென்பது வருமானவரி போன்றன) யாகப் பெற வேண்டுமேயன்றி மறைமுக வரியாகப் பெறக்கூடாது (மறைமுக வரிகள் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் மீதுள்ள தீர்வை போன்றது). இன்னும் இந்த நாட்டின் பொருட்செல்வத்தை அபிவிருத்தியாக்குவதற்கு கைத்தொழில்களை நிறுவவேண்டும். இந்நாட்டின் சகல வளங்களையும் பயன்படுத்தவேண்டும். இவற்றுக்கென ஓர் திட்டத்தை இப்போதே அரசாங்கம் வகுக்கவேண்டும்.


## விளம்பரம்

ஆச்சாரிஸ் (வரையறுக்கப்பட்டது)
இலங்கையிற் பதியப்பட்டது
அங்கத்தவர்களின் உத்தரவாதம் வரையறுக்கப்பட்டுள்ளது

நிர்வகிக்கப்பட்ட மூலதனம்: ஒரு லட்சம் ரூபா
பங்கு ஒன்று 10 ரூபாவீதம் 10000 பங்குகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.
இப்பொழுது வழங்கப்படும் பங்குகள் 30000 ரூபா மூலதனத்திலிருந்து பகுக்கப்பட்ட தனித்தனி 10 ரூபா கொண்ட 3000 பங்குகளாகும்,

இக்கம்பனியார் நடத்துங் கருமங்கள்:
ஆபரணங்கள் செய்தல், அரசாங்க கட்டடங்கள் பொருத்தமான முறையில் அமைத்துக் கொடுத்தல், நகை அடுபிடித்தல், பொருள்பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்தல், மோட்டர் பகுதிக்குரிய பொருள்கள், மின்சார இயக்கப் பொருள்கள், றலி சைக்கிள்கள் இன்னும் இவைபோன்ற பொருட்களில் வியாபாரம் செய்தல் முதலியனவாம்.

பங்குகளைப் பெற விரும்புவோர் இப்பொழுதே தவறாது பெற்றுக்கொள்ளல்வேண்டும். பத்துப் பங்குகட்குக் குறையப் பங்குகள் ஏற்கப்படமாட்டா.

இக்கம்பெனிக்குரிய விதானப் பத்திரமும் பங்குக்காகிய விண்ணப்பப்பத்திரமும், யாழ்ப்பாணம், காங்கேயன்துறை றோட், 213ம் இலக்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

டெலிபோன்: 168. தந்தி: விஸ்வகர்மா.

M. 242 20, 27 2-48—5, 12-3-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவின் அலங்கோலம்

## வேண்டாம் என்பதே இப்போதுபேச்சு

இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானதும், முந்தி ஒன்றுக்கும் உதவாது என்று புறக்கணிக்கப்பட்ட கோதுமை மாவுக்கு ஓர் சுகதிசை ஆரம்பித்து ஏறக்குறைய 5 ஆண்டு காலமாக நிலவியது. "சர்வம் மாவு ஜெகத்" ஆகின்றது. ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இன்று மாவை வேண்டாம், வேண்டாம் என்று கூற சங்கக் கடைக்காரரும், மற்றும் வியாபாரிமாரும், தம் இருப்பிலுள்ள மாவை என் செய்வது என்று ஏங்குகிறார்கள். சில சங்கக்கடை மனேஜர்மாரும், வியாபாரிமாரும் மாவைக்கட்டாயம் வாங்கத்தான்வேண்டும், இல்லையேல் சீனி தரமுடியாது என்று தமக்கு வாய்ப்பாகக் கருதிய ஏழைகளை ஏமாற்றுகிறார்களென்றும் செய்தி பிறக்கிறது. இந்த ஏமாற்றுவித்தைகளுக்கு இடங் கொடுக்கக்கூடாது என்பதைப் பொதுஜனங்கள் உணர்ந்துகொள்வாராக. மாவைக் கட்டாயம் வாங்கத்தான் வேண்டும் என்ற பிரமாணம் எங்கும் இல்லை. விரும்பினால் வாங்கலாம் இல்லையேல் வாங்காதொழியலாம். சங்கக்கடை நிர்வாகியோ, தனிப்பட்ட வியாபாரிமாரோ பொதுஜனங்களை இப்படி ஏமாற்ற முற்பட்டால், அவர்களைப் பற்றி உடனே மேலதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டியது அப்பொதுஜனங்கள் கடமையாகும்.

திரு. ரத்னாயக்கா - உணவுபகுதி மந்திரியாக வந்த கைமேற்பலன்தானோ யாவுக்கிருந்த மாகம்பீரனமை. நெல் அரிசி மீதுள்ள சகல கட்டுப்பாடுகளும் நீங்கிய தன் பயனாக, கொத்து இரண்டரை ரூபாவாக விற்ற நாட்டரிசி இன்று 85 சதம் தொடக்கம் 1 ரூபா வரையாய்க் குறைந்துவிட, ஊரவர்கள் அதனையே வாங்கி வயிறார உண்டு உணவு மந்திரியை வாழ்த்துகிறார்கள் நாட்டரிசி மாத்திரமன்றி, வேறுபல அரிசிகளும் வேண்டிய அளவுக்கு இந்த யாழ்ப்பாணத்திலே எவ்வித தடைகளுமின்றிப் பெறற்பாலன. இப்போதுள்ள விலை விகிதம் நிரந்தரமானதல்ல என வர்த்தகர் அஞ்சுகின்றபடியால் அவர்கள் அதிகம் இருப்புவைக்க விரும்புகிறார்களில்லை. ஒவ்வொரு கடையிலும் ஒருகிழமைக்குப் போதிய இருப்புத்தான் அதிகமாக உண்டு. அரசாங்கம் சங்கக்கடைகள் மூலமாக நாட்டரிசியையும் கூப்பன் அரிசியுடன் விநியோகம் செய்ய—அதுவும் 57 சதத்துக்கு—நிச்சயித்துவிட்டது, ஆகவே இம்மாதம் முடிவதற்கிடையில் இப்போது 90 சதம் ஒருரூபா என்று விற்கப்படும் நாட்டரிசி இன்னும் விலை குறையும் உற்பாதங்கள் காணப்படுகின்றன

நாட்டரிசி அபரிமிதமாக வந்தபின் கரைஞ்டிப்பச்சை என்னும் பிரேசில் அரிசிக்கிருந்த அற்பமானமும் போய்விட்டது. அநேகர் வாங்கவேண்டியதற்காக வாங்கி, பின்னர் விற்றுவிடுகிறார்கள். சீனியின் விலையும் 'கள்ளமார்க்கெட்டில்' 65 சதத்துக்கு வந்திருப்பதும் குறிப்பிடத்தக்க நல்ல செய்தியாம்.

பாண் என்னும் கோதுமையப்பம் இன்று தேடுவாரற்றுக் கிடக்கின்றது.

---

பருத்தித்துறை டிஸ்திறிக் நீதிஸ்தலம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. பருத்தித்துறைக்கு வேறாக ஓர் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தை அமைப்பதுபற்றி நீதிப்பகுதி மந்திரி ஆலோசித்துவருகிறார்.

○ ○ ○

யேல்மாகாணத்தைச் சேர்ந்த பெலியாகொடைப் பொலிஸ்தானத்துக்குச் சொந்தமான காரைக் களவாடியதாகக் கழனியைச்சேர்ந்த காசிம் என்பவன் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறான்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—55)

### ஏன் அவசரப்படுவான்?

பாக்கியலட்சுமியும்விஜயரத்தினமும் சிவகுருநாதன் தனபாக்கியமென்னுமிவர்களுடைய விவாக கருமத்தை அடுத்தமாசத்தில் வரும் ஒரு சுபதினத்திலே நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கண்ணகியம்மை சிவபாக்கியமென்னுமிவர்களுக்கு ஒரு கடிதமெழுதினர்: அக்கடிதத்தை அவர்களிருவரும் சிவகுருநாதனுக்குக் காட்டி அப்படிச் செய்வதுதான் நல்லது என்றுஞ் சொன்னார்கள்: சிவகுருநாதன், "செய்யத்தான் வேண்டும், ஆனால், ஏன் அவசரப்படுவான்" என்ற கேள்வியைக் கேட்டான்: அப்பொழுது, சிவபாக்கியம் தமயனை நோக்கி "அண்ணா, நீங்கள் தனபாக்கியத்தை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்வீர்களென்பதிற் சந்தேகமில்லை; ஆனாலும் தனபாக்கியமெனிலோ அநாதப்பிள்ளை, அவளுடைய கருமத்தில் நாங்கள் பாராமுகமாகவிருந்தால், தவணையிட்டு வந்தால் அவள் ஆரிடப்போய் முறையிடுவளென்பதை நாங்கள் சிந்திக்கவேண்டுமல்லவா! இனி என்னுடைய அவரும் தாம வளர்த்த மகளென்றறியாயப்பற்றி இவ்விஷயமாக எதனையும் வெளியிட முடியாத நிலைமையிலிருக்கிறார்: அதற்காகச் சொல்லுகிறேனேயொழிய, அண்ணா, நீங்கள் அறியாத விஷயத்தை நான உங்களுக்குத் தெரிவிக்கிறேனென்று என்னை விபரீதமாக எண்ணிவிடாதீர்கள்" என்று விநயத்தோடு சொன்னாள்; தங்கை சொன்ன நியாயத்தைக் கேட்ட தமயன் மகிழ்ச்சியடைந்தானேனும், புறத்தே காட்டானாய், "தங்கைச்சி, தனபாக்கியத்தை நான் தாரமாகக் கொள்வது முறையல்லவே" என்றான்; கேட்ட சிவபாக்கியம் திடுக்குற்றாள்: ஏங்கினாள், செய்வதின்னதென்றறியாதவளாய்க் கலங்கினாள்; 'அண்ணா, அப்படியேன் சொல்லுகிறீர்கள்" என்று சஞ்சலத்துடன் சிவகுருநாதனைக் கேட்டாள்; தான் சொன்ன வார்த்தையினால் தங்கை கலங்குவதை அவதானித்த தமயன், "அருமைத்தங்காய், கவலைப்படாதே இப்பொழுது தனபாக்கியத்தின் தகப்பனாக மதிக்கவேண்டியது ஆரை" எனலும், "என்னுடைய இவரைத்தானண்ணா" என்று பதில் சொன்னாள் சிவபாக்கியம்; "ஆம், அபிமானப் பிதாவென்று கொண்டாலும், வளர்த்த பிதாவென்று கொண்டாலும் எனது மைத்துனர்தாம்தனபாக்கியத்திற்கு இப்பொழுது பிதா: அவர் பிதாவானால், அவருடைய மனைவிதானே அந்தப்பெண்ணுக்குத் தாய்" என்று சொல்லிச் சிரித்தான் சிவகுருநாதன் இப்படிச் சொன்னவுடனே "என் அண்ணா வேடிக்கையாகச்சொன்னதை நிசமென்றலவோ நான் நம்பிவிட்டேன்" என்று மகிழ்ச்சியோடு சொல்லி மனமாறினாள் சிவபாக்கியம், சிவபாக்கியமும் கண்ணகியம்மையும் அப்படியே அடுத்த மாசத்தில் விவாகம் நடத்தலாமென்னுங் கருத்துப்பட ஒரு கடிதத்தை விசயரத்தினம் பாக்கியலட்சுமி யென்னுமிருவருக்கும் எழுதினர். (வளரும்)

## மாமிசமும் பௌத்த குருமாரும்

2 ம்பக்கத் தொடர்ச்சி

கேட்டு அங்கிருந்தவர்கள் குசுகுசு என்று பேசத் தொடங்கினர். மகாத்மாவுக்குமுன் இப்படிச் சொன்னாலும் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள் என்ற எண்ணத்தினால் குசுகுசு வென்று பேசினார்களா?)

மகாத்மா: நீங்கள் மாமிசம் சாப்பிடுவதுண்டா?

பௌ. குருமார்: ஆம்.

மகாத்மா: ஏன்?

பௌ. குருமார்: எதனை எமக்களித்தாலும், அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மகாத்மா: கோழி, ஆடு, மாடு பன்றி முதலாம்பிருகஇறைச்சியையே, மீனையோ வழங்க வேண்டாம் என்று உங்கள் சமயத்தவர்க்கு நீங்கள் ஏன் புத்திமதி கூறுவதில்லை?

பௌ. குருமார்: (மௌனம்)

மகாத்மா: ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? ஏன் என்கேள்விக்கு விடைதரத் தயங்குகிறீர்கள்?

பௌ. குருமார்: (மீண்டும் மௌனம்)

மகாத்மா: (இந்தச் சம்பாஷணையின் போது துவிபாஷகராயிருந்து, மகாத்மா சொல்வதை பௌத்தகுருமார்க்கும், அவர்கள் சொன்னதை மகாத்மாவுக்கும் கூறிய டிஸ்திறிக் நீதிபதி திரு வில்வெஸ்ரர் ஜெயவிக்ரமாவை விழித்து): ஐயா, துவிபாஷகரே, இவர்களுடைய விடை என்னவென்பதை நான் அறிய விரும்புகிறேன் என்று இவர்களுக்குக் கூறும்,

திரு. ஜெயவிக்கிரமவும் அந்தப் பௌத்த குருமாரை நோக்கி, ஏதாவது சொல்லிவிடுங்கள்; நீங்கள் மௌனம் சாதிப்பது மகாத்மாவுக்கு அவமரியாதை செய்வது போல் முடியும்" என்று காதோடுகாதாய்க் கூறினார்.

பௌ. குருமார்: (தங்களுக்குள் கலந்தாலோசித்துவிட்டு) மகாத்மாவை நோக்கி): எங்கள் மதத்தவர்க்கு அப்படிப் புத்திமதி கூறுவது வழக்கமில்லை. எங்களுக்குத் தரும் உணவு எப்படியிருக்கவேண்டும் என்பதை நிச்சயிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்வது வழக்கமில்லை: அவர்களிலே அதனை விட்டுவிடுவதுதான் சம்பிரதாயம்

மகாத்மா: ஆனால் அவர்களின் ஆன்மார்த்த விஷயங்களுக்கு நீங்களல்லவா வழிகாட்டவேண்டிய குருமார்? அப்படிப்பட்ட நீங்கள் அவர்களுக்கு நற்புத்தி புகட்டலாமல்லவா?

பௌ. குருமார்: (மறுமொழி இல்லை).

மகாத்மா: இனி மாமிசம் எமக்குத் தரவேண்டாம் என்று உங்கள் மதத்தவர்க்கு புத்தி கூறுவதாக எனக்கு, மாத்திரமேனும் பிரதம பௌத்த குருமாராகிய நீங்கள் வாக்குப் பண்ணுவீர்களா?

பௌ. குருமார்: (மீண்டும் மறுமொழியில்லை)

மகாத்மா: எனக்கு மறுமொழி உதவவேண்டும். என்னுடைய கேள்விக்கு விடைதர ஏன் இவ்வளவு தயக்கம் கொள்கிறீர்கள்? உங்களுக்குச் சம்மதமில்லையா? அப்படிச் சம்மதமில்லை என்றால், ஏன் சம்மதம் இல்லை?

பௌ. குருமார்: சரி, ஆகட்டும்: (அதாவது இனி மாமிசம் கொடுக்க வேண்டாம் என்று தம் மதத்தவர்க்குப் புத்திமதி கூறச் சம்மதித்தனர்)

மகாத்மா: மிகவும் நன்றி ஆனால் ஒன்று: இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள மக்களுக்கு, யாத்திரையில் உள்ள பிரதம குருமார் இனிப் பௌத்த மதத்தவர்க்கு மாமிச உணவு கொடுக்க வேண்டாம் என்று புத்திமதிகூற வாக்குப் பண்ணிவிட்டனர் என்று நான் கூற எனக்கு அநுமதி தருவீர்களா?

மகாத்மா கோரிய அந்த அநுமதியைக் கொடுக்க அந்தப் பௌத்த குருமார் தயங்குவது போலக் காணப்பட்டனர் மகாத்மா அந்த அநுமதியைத் தர

பௌ. குமார்: சரி, ஆகட்டும்.

## திருச்சி ரேடியோ

சனி மார்ச் 13

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி எச் சகுந்தலா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 மதுரை வி எஸ் சக்ரபாணி வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 மதுரை வி எஸ் சக்ரபாணி வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆங்கிலப் பேச்சு 2 15 வி கல்பகம் நாராயணன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 வி கல்பகம் நாராயணன் பாட்டு 5 40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எச் சகுந்தலா பாட்டு 7 15 தென்னிந்தியத் தொழிலாளி கடைத் தொழிலாளி 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராசிலுள்ள படி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 செம்மை வைத்தியநாத பாகவதர் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 கிளாரினெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

ஞாயிறு மார்ச் 14

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருப்பத்தூர் பி அழகுரத்னம்மாள் கோட்டுவாத்தியம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 8 30 டி கே லக்ஷ்மணன் பாட்டு 9 முடிவு.

12 ராமராஜ்யம் 12 30 தொழில் மாற்றம் 12 40 கீதகனி 12 45 பூச்செண்டு 12 50 வளர்பிறை 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி எஸ் பகவதி 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 திருப்பத்தூர் பி அழகுரத்னம்மாள் கோட்டுவாத்தியம் 5 40 தேவாரதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி கே லக்ஷ்மணன் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 புத்தகவிமர்சனம் 8 பல்லடம் சஞ்சீவராவ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல் வகை 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஜே வி ராகவன் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் மார்ச் 15

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருக்காளர் வ கோவிந்தசாமி பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 8 30 திருவல்லிக்கேணி என் குத்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் பி கல்யாணசுந்தரம் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2 05 எஸ் பி கல்யாணசுந்தரம் பாட்டு 2 5 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருக்காளர் வ கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 மைசூர் டி குருராஜப்பா வயலின் 7 30 தமிழில் செய்திகள் 7 45 இவற்றின் பொருளாதாரம் 8 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எச் எஸ மத்வச்சார் கோட்டுவாத்தியம் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.


## விளம்பரம்

**எஸ். எஸ். தாசன் கொம்பனி**

**(2-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்)**

சிகப்புக் கை மார்க் இங்கிலீஷ் சீமேந்து லண்டன் 112 றூத்தல் பாக்கேட்டுகளில் மேற்படி கொம்பனியில் கிடைக்கும்.

மொத்தத்திற்கு ரூ. 8-50. சில்லறைக்கு ரூ. 8-75.

12-3-48—9-4-48.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டன!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய புதியபாடத் திட்ட

## நாலாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—35

## ஐந்தாந்தரக் கணிதம்

விலை ரூபா 1—75

சிறந்த விளக்கமுறைகள்! நிரம்பிய மனக்கணிதப் பயிற்சிகள்!
தெளிவான அப்பியாசங்கள் கொண்டுள்ளன
இரண்டாம், மூன்றும், ஆருந்தரக் கணிதங்களும்
மனக்கணிதங்களும் (அச்சில்)

PUBLISHERS:
**THE NORTH CEYLON BOOK DEPOT**
POINT PEDRO

Std40 27-2-48 — 26-3 48



# சமயகுரவர் சந்தானகுரவர்

[சரித்திரச் சருக்கம்]

*

இந்துசாதனப் பத்திராசிரியர்
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
தொகுத்தது

இந்நூல் தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. (S. S. C.) மாணவர்கட்குச் சைவ சமயப் பாடங்களுளொன்ருகவிதிக்கப்பெற்றுளது.

விலை 75 சதம் (12 அணு)

மனேஜர்,
வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம், சைவப்பிரசாசயந்திரசாலை.
20—2—48.



## திருக்குறள்: அறத்துப்பால்

(1 38 அதிகாரங்கள்)

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், இந்துசாதனப் பத்திராசிரியர் ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை வகுத்தது; யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 30வது பிரசுரம்.

விலை ரூபா 1 — 25

மனேஜர்
வண்ணர்பண்ணை 27-2-48 யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை



# நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது
யாழ்ப்பாணம் - சென்னை - பினுங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22. 6-6-47—6-6-48



# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48



## தந்தரோக சஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்
சந்தனதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீசம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும் வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல், இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை
Std 25 1-7-46—30 6.48 (வெ)



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி
சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி,
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள்
இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std. 7-8;29 1-8—30.4


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Friday March 12, 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org